1979 ஏப்ரல் 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன,

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்,]

(3) தகவல் கோரல்.

பேரவைச் செயலர் குறித்து

திரு. நா. சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, மிக முக்கியமான பாயின்ட் ஆப் ஆர்டர். மேலவையினுடைய செயலாளர் திரு, ராமசாமி இந்த அவையின் செயலாளராகவும் பணியாற்றுகிறார், ஆகவே. ஒரே செயலாளர் இரண்டு இடங்களிலும் பணியாற்றுகிறாரே. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அங்கேயும் இருக்கலாம், இங்கேயும் இருக்கலாம். இடைக்கால ஏற்பாடுதான் இது. ஒரே இரண்டிடத்திலும் செயலாளர் செயல்படலாம், அதிலே ஒன்றும் தவறு இல்லை.

(4) ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

(அ) கிண்டி இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் நிறுவனத் தொழிலாளர்கள் கைது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, ''கிண்டியிலுள்ள இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் நிறுவனத்தில் 1979-ம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 12-ம் நாள் முதல் அமைதியான முறையில் இயக்கம் நடத்திக் கொண்டிருக்கும்போது நேற்று 1979-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 20-ம் நாளன்று சுமார் 34 பேர்கள் கைது செய்யப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும்'' என்று கேட்டு திரு. சி. கோவிந்தராசன், திரு. ரா. கிருஷ்ணன், திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் ஆகியோர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி அவசர முக்கியம் வாய்ந்தது என்பதைப்பற்றிச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன் திரு. சி. கோவிந்தராசன்.

*திரு. சி. கோவிந்தராசன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் அதேபோல மற்ற பொதுத் துறை நிறுவனங்களில் உள்ள தொழிலாளர்களின் ஊதியம்